[27th April 1960

SRI M. KANDASAMI PADAYACHI : சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டி கள்ளக்குறிச்சிக்கும் உளுந்தூர்பேட்டைக்கும் வர வசதி செய்ய முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : அதையும் பரிசீலனை செய்து பார்த்தார்கள். நல்லதொரு முடிவு எடுக்க வில்லையென்று தெரிவிக்கிறேன்.

Canteen for T.I. Cycle Factory

• 842 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the management of T.I. Cycles, Ambattur, was granted permission by the Chief Inspector of Factories to allow its canteen being run by a Co-operative Society ;

(*b*) if so, when that permission was given ; and

(*c*) whether the Chief Inspector of Factories has taken steps to ascertain whether the majority of the workers desired that the canteen be run through a Co-operative Society ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) The Inspector of Factories, Madras, after ascertaining that the majority of workers were not in favour of the canteen being run on a co-operative basis, has asked the management to dissolve the management of the present canteen and run it themselves.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த காண்டீனில் தொழிலாளர்கள் பங்குதாரர்களாக இல்லை என்ற காரணத்திற்காக அவர்களுக்குச் சிற்றுண்டி கொடுக்காத காரணத்தினால், அவர்கள் சில நிமிஷங்கள் வேலை செய்யாமல், அப்படி இருந்ததற்காக 8 நாட்களுக்கு சம்பளம் பிடிக்கப் பட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவர்கள் குறைகளை லேபர் ஆபீசர் விசாரணை செய்து, அரசாங்கம் அதை அட்ஜூடிகேஷனுக்கு அனுப்பும் நிலை யிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது காண்டீன் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் வேறு பல துறைகளைப் பற்றிக் கேட்கிறார்கள். காண்டீனை கம்பெனியே நடத்த வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

Nagammal Spinning Mills, Nagercoil

* 843 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the reasons for the closure of the Nagammal Spinning Mills, Limited, at Nagercoil ; and

(*b*) the steps taken by the Government to re-open the mills ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The attention of the hon. Member is invited to the statement made under rule 41 of the Madras Legislative Assembly Rules on the 7th April 1960.

(*b*) The Labour Officer, Nagercoil, took up conciliation in the dispute. He has now reported that the lock-out in the mills was lifted on 12th April 1960, and that the workers resumed work on 13th April 1960.

MR. SPEAKER: Questions are over.